20.02.2024 ஆம் தேதிய அவசரக்கூட்ட பொருட்கள்

பொருள் எண்.1

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.32658/ஆர்-1/2023 நாள் 27.12.2023 மற்றும் திருநெல்வேலி நகராட்சி மண்டல இயக்குநர் அவர்களால் கடிதம் ந.க.எண்.5356/2023/அ2 நாள் 03.01.2024 கடிதங்களில் நகராட்சிகளில் சொத்துவரியுடன் கல்வி வரிவிதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆரம்ப கல்விச்சட்டம் 1920 பிரிவு 34-ல் அரசின் முன் அனுமதியுடன் நகர்மன்றங்கள் சொத்துவரியுடன் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் விகிதத்தினை பிரிவு 35(1) -ல் சொத்துகளின் ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மிகாமல் விதிப்பு செய்ய வரையறை செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதங்களில் வரிவிதிப்பு செய்யாத நகராட்சிகளுக்கு உரிய சட்டப்பிரிவுகள் மற்றும் வழிமுறைகளை பின்பற்றி அரசின் ஆணை பெற செயற்குறிப்பு அனுப்ப கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

குளச்சல் நகராட்சியில் கல்வி வரி விதிப்பு செய்யப்படாததால் மேற்கண்ட சட்ட பிரிவுகளின் அடிப்படையில் சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காட்டிற்கும் மண்டல கல்வி வரிவிதிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. சொத்துவரி ஆண்டு மதிப்பில் 5 விழுக்காடுக்கு மிகாமல் கல்வி வரிவிதிப்பு செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.699,குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகள் இல்லை என்பதை அறிவிப்பு மூலம் தெரிவிக்க மன்றம் முடிவு செய்கிறது. மேலும் 5 விழுக்காடுக்கு மிகாமல் கல்வி வரிவிதிப்பு செய்ய அனைத்து உறுப்பினர்களும் எதிர்ப்பு தெரிவித்த தால் இந்த தீர்மானம் நிறுத்தி வைக்கப்படுகிறது.**

பொருள் எண்.2

1. Resolved that the Colachel Municipality is authorised to borrow a loan amount of **Rs.119.16 Lakhs** for ” Conversion of existing street lights into energy efficient LED lights (1539 Nos” from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.145, MA&WS (MA2) Dept., dated 14-10-2022.

2. Resolved that the Colachel Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other

formalities including affixing the common seal of the Colachel Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Colachel Municipality.

3. Resolved that the Colachel Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO. This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.
4. Resolved that the Executive officer be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.
5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Colachel Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.
6. The Colachel Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.

ந.க.எண்.1050-1/2022/E1

**தீர்மானம் எண்.700, ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN 74 V 3530 பழுது பணிகள் உத்தேச மதிப்பீடு ரூ.50,000 தொகையில் மேற்கொள்ள இந்நகர்மன்றத் தீர்மானம் எண் 679 நாள் 29-12-2023ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் படி, 02-02-2024ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது, பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Akshaya Motors, Cherukol, Kattathurai, Kanniyakumari Dist | 49,500/- |
| 2 | Matha Motors, Chirist Nager, Main Road, Vellamadam | 54,350/- |

அலுவலகக் குறிப்பு ;

1. குறைவான விலைப்புள்ளி வழங்கிய அக்சயா மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரப் பணிகள் என்பதால், நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

   ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.701, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் 2023-24 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் 11 எண்ணம் தினக்கூலி பணியாளர்கள் தினசரி குடிநீர் வினியோக பணிகளை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.441 நாள் 30.03.2023 மற்றும் தீர்மானம் எண்.585 நாள் 31.07.2023-ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி, ரூ.14,25,000/- மதிப்பீட்டுத் தொகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்காணும் பணியினை ஜனவரி 224 முதல் மார்ச் 2024 வரை பணிகள் மேற்கொள்ள ஆகும் கூடுதல் செலவினம் ரூ.3,14,000/- தொகையினை இந்நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தினை அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரித்து அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.263/22023/இ1

**தீர்மானம் எண்.702, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொறியியல் பிரிவு பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN 74AW 5692 கடந்த 06-02-2024ம் தேதி பஞ்சர் ஆகி விட்டதாலும், வீல் அலைன்மென்ட் உட்பட சிறு பழுது பணிகள் மேற்கொண்டமைக்கு செலவுத் தொகை ரூ.950/- ஈப்பு வாகன ஓட்டுநர் திரு.சுந்தர்ராஜ் என்பவரால் வழங்கப்பட்டுள்ளதனை அன்னாருக்கு வருவாய் மற்றும் மூலதன நிதியில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.370/2023/இ1

**தீர்மானம் எண்.703, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 24 வார்டுகளிலும் குடிநீர் குழாய் இணைப்புகள் உட்பட இதர பணிகள் மேற்கொள்ளும் போதும், இயற்கை இடற்பாடுகளால் ஏற்படும் சாலை பழுது பணிகளை உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் 2024-2025 ஆண்டிற்கு மேற்கொள்ள ரூ.5,00,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 366 /2024/இ1

**தீர்மானம் எண்.704, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 24 வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால் ஓடைகளை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், சிறுபாலம் மற்றும் Concrete Slab மூடிகள் அமைக்கும் பணிகளை உடனுக்குடன் 2024-2025 ஆண்டிற்கு மேற்கொள்ள ரூ.5,00,000க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணிகள் மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு ; மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.367 /2024/இ1

**தீர்மானம் எண்.705, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் நுண் உரமாக்கல் மையத்தில் குப்பைகளை பொடியாக்கும் இயந்திரத்தில் உள்ள பெல்ட் அறுந்து விட்டதால் தினசரி பெறப்படும் மக்கும் குப்பைகளை அரைக்க இயலாமல் பணிகள் தொய்வடைந்துள்ளது. எனவே மேற்காணும் இயந்திரத்தில் பழுது பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.45,000/- தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியில் இருந்து வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 1005/2020/இ1

**தீர்மானம் எண்.706, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்குச் சொந்தமான உப்பளம் நுண் உரமாக்கல் மையத்தில் உள்ள குப்பைகளை பொடியாக்கும் இயந்திரத்தில் பழுது பணிகள் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி 02-02-2024ம் தேதி குறுகிய கால விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.சி.சுரேஷ்,<br>கன்னகோடு, மார்த்தாண்டம் | ரூ.44,950 |
| 2 | RJ Power, Diesel Generator Sales and Service, Vettumani Junction, YMCA Complex(Opp) | ரூ.46,000 |

அலுவலக குறிப்பு :

1. பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.சி.சுரேஷ், மார்த்தாண்டம் என்பவருடைய விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 1005/2020/இ1

**தீர்மானம் எண்.707, அ.கு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள். தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தணைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன் படி இந்நகராட்சி பகுதியில் இயங்கிவரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக்

கட்டணம் 01.04.2024 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்– (1) அட்டவணைகள் I, II, III–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும். ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக் கூடாது.

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், குளச்சல் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 –இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு. நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரிவிபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமா்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளா் அல்லது குடியிருப்பவரும். அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 விதி (5) ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணை 1, II, III மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 ந் தேதி முதல் அமலுக்கு வரும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

## அட்டவணை I

[See rules 289(1), (2) and (5)|

1. பொருந்தக்கூடிய தன்மை :
   1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. உரிமக்கட்டணம்:

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ. விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்க வில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GST v©) அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ. விண்ணபத்தாரர். ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச் சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, படிவம் 17 ல் உள்ள பிரமாணப் பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

(a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/– | 3,500/– |

(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/– | 5000/– |

(c) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/– | 10,000/– |

(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/– | 35,000/– |

**வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| வ. எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல்: | குறு தொழில் நிறுவனங்கள் | சிறு தொழில் நிறுவனங்கள் | நடுத்தர தொழில் | மற்றவை (அல்லது) |
|---|---|---|---|---|---|

| | | எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1750/- | 3750/- | 8000/- | 11000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1600/- | 3750/- | 7750/- | 10,500/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12,000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12,000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும். பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12,000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள்(மின் மோட்டர்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 120000/– |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1750/– | 3750/– | 8000/– | 11000/– |
| 15 | செங்கல் சூளைகள் | 1750/– | 3750/– | 8000/– | 11000/– |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி அனைத்து வகையான பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைத உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 19 | அனைத்து வகையான 19 கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 120000/– |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 120000/– |
| 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 120000/– |
| 36 | துப்பரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1600/– | 3750/– | 7750/– | 10500/– |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |
| 41 | அனைத்து வகையான 41 மர/பிளைவுட்/சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 120000/– |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2000/– | 4000/– | 9000/– | 12,000/– |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2500/– | 5000/– | 10000/– | 12500/– |

**அட்டவணை II**

**[See rules 289 (1),(2) and (5)]**

**1.** பொருந்தும் தன்மை:

**(1)** இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

**2.** பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:–

**1.** இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.

**2. 2013–ம்** ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் **(2013–ம்** ஆண்டு மத்தியச் சட்டம் **18)** பதிவு

செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள். நிதிநிறுவனங்கள்.

3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.

4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959 ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் ஐஅ) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் அட்டவணை || இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச தொழில் உரிமக்கட்டணங்களுக்கான பட்டியல்

1. **உரிமக் கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| நகராட்சி மன்றம் | 700/– | 10,000/– |

2. **வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல்:**

| வ.எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் | 01.04.2024 முதல்நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |

| | | |
|---|---|---|
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சர்வீஸ் மையங்கள் | 1000 |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை விற்பனை செய்தல் | 1500 |
| 8 | கழிவுத்தாள் கடை/பழைய வேண்டாத பொருட்கள் | 2000 |
| 9 | நூற்பு வேலைகள் | 1000 |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 1000 |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 750 |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 1000 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 750 |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 2000 |
| 17 | தலைக்கவச கடைகள் | 1500 |
| 18 | இரு சக்கர வாகனகங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 1500 |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 2000 |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 1500 |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங் களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 32 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 34 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (துளவாட சாமான்கள்) | 750 |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 5000 |
| 40 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 |

| | | |
|---|---|---|
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 42 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 43 | அனைத்து வகையான மர / ப்ளைவுட்/ சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 1000 |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1500 |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 50 | அழைப்பிதழ்கள்/வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1500 |
| 52 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 53 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 54 | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 55 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750 |
| 56 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 1500 |

| | | |
|---|---|---|
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 5000 |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 1000 |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 5000 |
| 62 | பார்சல் புக் செய்யுமிடங்கள்/ தூதஞ்சல் (Courier) சேவைகள் | 1000 |
| 63 | கேபிள் டி.வி சேவைகள் | 2000 |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 1000 |
| 66 | பட்டாணி வறுவல் | 750 |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 1000 |
| 68 | பஞ்சு மெத்தை/தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 750 |
| 70 | பல்பொருள் அங்காடி | 5000 |
| 71 | ஜெராக்ஸ் கடை. கணிப்பொறி பதிப்பக மையங்கள். இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 1000 |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 1000 |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 750 |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 1000 |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000 |
| 76 | பொற்கொல்லர்கள் | 750 |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 1500 |

| | | |
|---|---|---|
| 78 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2500 |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 80 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத /ஸ்பாஸ் (Spa's) | 2000 |
| 81 | தையல் கடைகள் | 1000 |
| 82 | சலவையகங்கள் | 1000 |
| 83 | வினைல் போர்டு கடைகள் | 1000 |
| 84 | காலணி கடைகள் | 1000 |
| 85 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 1000 |
| 86 | மிதி வண்டி மற்றும் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 1000 |
| 87 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 1000 |
| 88 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 1000 |
| 89 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 5000 |
| 90 | அச்சகங்கள் | 1000 |
| 91 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 1000 |
| 92 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |
| 93 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |
| 94 | நெல் அவித்தல் | 1000 |
| 95 | மரம் அறுக்கும் ஆலைகள் | 1000 |
| 96 | FCS ஆலைகள் (Farm and commercial Storage Manufacturing) | 1000 |
| 97 | அரிசி ஆலைகள் | 1000 |
| 98 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 99 | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 100 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 101 | கோழி இறைச்சி /ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 102 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 3000 |
| 103 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | – |
| 104 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 1000 |
| 105 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 106 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 107 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 108 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 109 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 110 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000 |
| 111 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000 |
| 112 | அனைத்து வகையான கால்நடைகள்/பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 113 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000 |
| 114 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 115 | காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 116 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 117 | பேக்கரிகள் | 1000 |
| 118 | பழச்சாறு கடைகள் | 1500 |

| | | |
|---|---|---|
| 119 | AMF (Assured Minimum Facility) உடன் டி கடைகள் | 1000 |
| 120 | நீர்வாழ்வன காட்சிசாலை (Aquarium) | 1000 |
| 121 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 1000 |
| 122 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 1000 |
| 123 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 2000 |
| 124 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 1000 |
| 125 | முடிவெட்டும் நிலையங்கள் | 1000 |

**SCHEDULE III**

**[See rules 289 (1), (2) and (7)]**

(1) பொருந்தும் தன்மை :– இந்த அட்டவணை.

(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

(2) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்

(3) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுச்சகூட்டங்களாகப் பயன்படுதப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கம் பொருந்தும்.

2) உரிம கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்):

(i) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள். சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.15000/–

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும்கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள். சிற்றுண்டிச் சாலை அல்லது உணவகங்கள். | சிற்றுண்டிச்சாலைக்கு –1200/–<br>உணவகம். உணவுக்கூடங்களுக்கு 2500/– |

(ii) 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்.

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1500/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.3500/– (ஒரு வருடத்திற்கான கட்டணம்);

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014– ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 2000/– |

(iii) 1939– ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள். சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள். | 5000/– |

(iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம்

குறைந்தபட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| தொழில் விபரம் | 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் | 5000/– |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களை | 2500/– |

| | |
|---|---|
| கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை **01.04.2024–** ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : **1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள உரிமக்கட்டண விபரங்களை மன்றம் பரிசீலித்து நிர்ணயம் செய்யலாம்.

**தீர்மானம் எண்.708, பொருள் எண்.10 அட்டவணை 2-ல் குறிப்பிடப்பட்ட இனங்கள் வரிசை எண்.8-க்கு 1500 எனவும் வரிசை எண்.10-க்கு 1000 எனவும், வரிசை எண்.15-க்கு ரூ.500 எனவும் வரிசை எண்.18-க்கு ரூ.1000 எனவும் வரிசை எண்.19-க்கு ரூ.1500 எனவும், வரிசை எண்.39-க்கு ரூ.3000 எனவும் வரிசை எண்.118-க்கு ரூ.1000 எனவும் நிர்ணயம் செய்திட ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ் காலனி,அலுவலக வளாகம் (2 எண்ணம்), துறைமுகத்தெரு மற்றும் மார்க்கெட் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் வைக்கப்பட்டுள்ள liquid chlorination plant மிகவும் பழுதுபட்டு பயன்பாட்டில் இல்லாமல் இருப்பதால் மேற்கண்ட plant களை சரி செய்து பயன்பாட்டில் கொண்டு வர பணியின் அவசர அவசியம் கருதி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,70,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ2/369/2024

**தீர்மானம் எண்.709, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் "என் குப்பை என் பொறுப்பு" மக்கும் குப்பை, மக்கா குப்பை ஒற்றை பயன்பாட்டு நெகிழி ஒழிப்பு, திறந்த வெளியில் மலம் கழித்தலை தவிர்த்தல், தனி மனித கழிவறையின் பயன்கள், டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு, வீட்டில் உருவாகும் மக்கும் குப்பைகளிலிருந்து கலப்புரம் தயாரித்தல், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருத்தல், தன் சுத்தம் ஆகியவை குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி 2 நாட்கள் நடத்துவதற்கு அனுமதிக்கும் அதற்காகும் செலவுத் தொகை ரூ.12,000/-னை இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.376/2024/எச்1

**தீர்மானம் எண்.710, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி டெங்கு கொசு ஒழிப்பு பணியில் 2023-24 ஆம் ஆண்டில் ஈடுபடுத்தப்பட்ட ஜெயம் மகளிர் சுயஉதவிக்குழுவின் பணிக்காலம் வரும் 31.03.2024 உடன் முடிவடைய உள்ளது. தற்போது டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்துள்ளதால் DBC பணி மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே மேற்கண்ட மகளிர் குழுவானது கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தினசரி ஊதிய அளவில் ஏப்ரல் 2024 முதல் ஜுன் 2024 வரை பணிகாலத்தை நீட்டித்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க..எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.711, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை, பாலத்தன்கரை, சி.எம்.சி காலனி மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 25 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார் மூலம் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு நகராட்சி பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மின் மோட்டர்கள் நாள் ஒன்றிற்கு 20 மணி ரேம் இயக்கப்பட்டு வருகிறது. மோட்டார்களில் ஏற்படும் திடீர் பழுதுகள் மற்றும், EB line fuse carrier, Panel board, Main switch போன்றவற்றில் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்யவும் மேற்படி பகுதிகளில் சீரான முறையில் தினந்தோறும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு வசதியாக 2024-25 ஆம் ஆண்டிற்கு Motor பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச தொகை ரூ.3,00,000/-ஐ குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.712, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகள் மேற்கொள்வதற்கு தேவையான பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 2023-24 ஆம் ஆண்டிற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.441 நாள் 30.03.2023 மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தீர்மானம் எண்.585 நாள் 31.07.2023 -ல் கூடுதலாக நான்கு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் எடுத்து பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளது. தற்போது மேற்படி பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் 9 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் 2024-25 ஆம் ஆண்டிற்கு (6 மாத காலத்திற்கு) பணி மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,80,000/-ஐ குடிநீர் நிதியில் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.713, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட 25 எண்ணம் ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து மின் மோட்டார் மூலம் 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு 44.03 கி.மீ நீளத்திற்கு பகிர்மான குழாய் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. 12.55 கி.மீ நீளத்திற்கு பம்பிங் 2 எண்ணம் 158 வால்வுகளும் இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி குழாய்கள் அனைத்தும் பல ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து வருவதாலும் நகராட்சி பகுதியில் ஏற்ற இறக்கங்கள் அதிகமாக இருப்பதாலும், அடிக்கடி வால்வு மற்றும் குழாய்கள் பழுதுபட்டுவிடுகின்றன. மேற்படி பழுதுகள் உடனுக்குடன் சரி செய்ய வேண்டி உள்ளது. எனவே 2024-25 ஆம் ஆண்டுக்கு பழுதுகள் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-னை குடிநீர் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.714, அ.கு. ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

**குளச்சல் நகர்மன்றம்**

**20.02.2024 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெறவிருக்கும் அவசர கூட்டம்**

**பொருள் எண்.2 தமிழாக்கம் செய்யப்பட்ட கூடுதல் விவரம்.**

அரசாணை நிலை எண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் 14.10.2022 -ல் இந்நகராட்சிக்கு 1539 எண்ணம் தெருவிளக்குகளை ஆற்றல் திறன் மிக்க எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றம் செய்திட மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி ( State Urban Infrastructure Development Fund) : 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.119.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) திரும்ப செலுத்தும் வகையில் கடனாக அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியினை 6 வருட கால அவகாசத்தில் 5 சதவீத வட்டியுடன் திரும்ப செலுத்த மேற்காணும் அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளதனை இந்நகர்மன்ற தீர்மானம் எண்.298 நாள் 26.10.2022-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. மாநில நகர்புறத்தின் கீழ் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள் கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUFIDCO) இலிருந்து தற்போதுள்ள தெரு விளக்குகளை ஆற்றல் திறன் கொண்ட LED விளக்குகளாக (1539 எண்ணம்) மாற்றுவதற்கு ரூ119.16 இலட்சம் கடனாக குளச்சல் நகராட்சிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி SUIDF G.O (Ms) எண்.145 (MAWS) (MA2) துறை நாள்.14.10.2022 தேதியிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி
2. கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள் ஏதேனும் இருந்தால் TUFIDCO வுடன் செயல்படுத்தவும் குளச்சல் நகராட்சியின் சார்பாக TUFIDCO செயல்படுத்த வேண்டிய ஆவணங்களில் குளச்சல் நகராட்சியின் பொது முத்திரையை ஒட்டுவதும உட்பட மற்ற அனைத்து சம்பிராதங்களையும் முடிக்க குளச்சல் நகராட்சிக்கு இதன் மூலம் அதிகாரம் உள்ளது என தீர்மானிக்கப்பட்டது.
3. குளச்சல் நகராட்சி சொத்து வரி, தொழில் வரி மற்றும் பிற வருவாய் வசூல் போன்ற வருவாய் வசூல் மீதான வங்கிக் கணக்கு TUFIDCO க்கு ஆதரவாக காலாண்டு /மாதாந்திர திருப்பிச் செலுத்தும் உறுதிப்பாட்டின் அளவிற்கு மாற்றியமைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. TUFIDCO விற்கு இந்த திட்டத்தின் கீழ் கடன் மற்றும் பிற அனைத்து நிலுவைத் தொகையை செலுத்தும் வரை இந்த Escrow கணக்கு இருக்கும்.
4. TUFIDCO க்கு இந்த திட்ட முன்மொழிவுக்காக பெறப்பட்ட கடனுக்கான அசல், வட்டி மற்றும் பிற தொகைளை திருப்பிச் செலுத்துவதற்கு

நகர்மன்றத் தலைவர்

குளச்சல் நகராட்சி

**குளச்சல் நகர்மன்றம்**

**20.02.2024 அன்று காலை 11.30 மணியளவில் நடைபெறவிருக்கும் அவசர கூட்டம்**

**பொருள் எண்.2 -க்கான கூடுதல் விவரம்.**

அரசாணை நிலை எண்.145 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) நாள் 14.10.2022 -ல் இந்நகராட்சிக்கு 1539 எண்ணம் தெருவிளக்குகளை ஆற்றல் திறன் மிக்க எல்.இ.டி மின் விளக்குகளாக மாற்றம் செய்திட மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி ( State Urban Infrastructure Development Fund) : 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.119.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) திரும்ப செலுத்தும் வகையில் கடனாக அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நிதியினை 6 வருட கால அவகாசத்தில் 5 சதவீத வட்டியுடன் திரும்ப செலுத்த மேற்காணும் அரசாணையில் உத்தரவிடப்பட்டுள்ளதனை இந்நகர்மன்ற தீர்மானம் எண்.298 நாள் 26.10.2022-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு (TUFIDCO) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி